# 108 திவ்யதேச ஸ்தலங்கள்



# 6. கோவிலடி (திருப்பேர் நகர்)



**பேரேயுறைகின்ற பிரான் இன்று வந்து**
**பேரேனேன்று என்னெஞ்சு நிறையப் புகுந்தான்**
**காரேழ் கடலேழ் மலையேழ்லுல குண்டும்**
**ஆராவயிற்றானை அடங்கப் பிடித்தேனே (*3745)***

**திருவாய்மொழி** 10-8-2

என்று நம்மாழ்வாரால் பாசுரஞ் சூட்டப்பட்ட இத்தலம் திருச்சியிலிருந்து 15 மைல் தொலைவில் உள்ளது. அன்பில் திவ்ய தேசத்திலிருந்து கொள்ளிட நதியின் மறுகரையைச் சேர்ந்தால் இத்தலத்தை அடையலாம். பூதலூர் ரயில் நிலையத்திலிருந்து சுமார் 8கி.மீ. கல்லணையில் இருந்து 4 மைல் தொலைவிலும் உள்ளது.

திருப்பேர் நகர் என்றால் யாருக்கும் தெரியாது. கோவிலடி என்று சொன்னாலே எல்லோருக்கும் தெரியும். இயற்கையின் அரவணைப்பில் மிகவும் ரம்மியமான சூழ்நிலையில் அமைந்துள்ள அழகான தலமாகும் இது. புராணம் கூறும் வரலாறு

இத்தலம் பற்றி பிரம்மாண்ட புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. புராணம் இதனை பலசவனச் ஷேத்திரம் என்று பகர்கிறது. தமிழில் புரசாங்காடு என்பதையே வட வானர் பலசவனம் என்று எடுத்தாண்டுள்ளனர். இவ்விடத்து புரசஞ் செடிகள் இன்றும் அளவு கடந்து பல்கிக் கிளைத்து சூழ்ந்து வளர்ந்தோங்கிய காட்சியைக் காணலாம்.

உபமன்யு என்னும் மன்னன் துர்வாச முனிவரின் சாபத்தால் தன்பலமிழந்து போக அதற்கு விமோசனம் வேண்ட இப்பலசவனம் ஷேத்திரத்தில் லட்சம்பேருக்கு அன்னதானம் அளித்தால் (ததி ஆராதனம்) சாபந்தீரும் என்று துர்வாசர் தெரிவிக்க இத்தலத்தின் அருகில் ஒரு அரண்மனையெழுப்பி அன்னதானம் செய்யலானார்.

நீண்டகாலமாக அன்னதானம் தொடர்ந்து நடந்து வருகையில் ஒருநாள் ஸ்ரீமந்நாராயணனே கிழப்பிராமண வேடங்கொண்டு இங்கு வந்து அன்னம் கேட்க அவருக்கும் பரிமாறப்பட்டது.

ஸ்ரீமந்நாராயணன் அன்றைய தினம் தயாரிக்கப்பட்ட உணவு முழுவதையும் உண்டு தீர்க்க “இதென்ன காரியம்” என்று வியந்த மன்னன் இன்னும் என்ன வேண்டுமென்று கேட்க எனக்கு ஒரு குடம் அப்பம் வேண்டுமென்று பெருமாள் சொல்ல அப்பம் செய்து கொண்டுவரப்பட்டது. அந்த அப்பக் குடத்தை பெருமாள் வாங்கியவுடன் உபமன்யு சாபம் தீர்ந்ததென வரலாறு.

இதனால் இப்பெருமானுக்கு "அப்பக்குடத்தான்" என்னும் பெயருண்டாயிற்று. இப்பெருமானின் வலது கை ஒரு அப்பக் குடத்தை அணைத்தவண்ணம் உள்ளது.

## மூலவர்

அப்பக்குடத்தான், அப்பால ரெங்கநாதன் புஜங்க சயனம்.

## தாயார்

1. இந்திரா தேவி 2. கமலவல்லி

## தீர்த்தம்

இந்திர தீர்த்தம்

## விமானம்

இந்திர விமானம்

## காட்சி கண்டவர்கள்

உபமன்யு, பராசரர்

## சிறப்புக்கள்

1. இத்தலம் மிகவும் தொன்மை வாய்ந்ததென்றும், ஸ்ரீரெங்கத்திற்கு முன்னதாக ஏற்பட்டதென்றும் அதனால் தான் கோயிலடி அதாவது ஸ்ரீரங்கம் கோவிலுக்கு ஆதியாக அடியெடுத்துக் கொடுத்த ஸ்தலமென்பதால் கோவிலடி என பெயர் பெற்றதாக கர்ண பரம்பரை.

2. பஞ்ச ரங்கம் என்று சொல்லக்கூடிய ஐந்து அரங்கங்களில் இதுவும் ஒன்று.

1. ஆதிரங்கம் - ஸ்ரீரெங்கப்பட்டினம் (மைசூர்)

2. அப்பால ரெங்கம் - திருப்பேர் நகர்

3. மத்தியரங்கம் - ஸ்ரீரெங்கம்

4. சதுர்த்தரங்கம் - கும்பகோணம்

5. பஞ்சரங்கம் - இந்தளூர் (மாயவரம்)

இந்த பஞ்சரங்கத்தைப் பற்றி குறிப்பிடும்போது ஸ்ரீரங்கத்தை மத்தியரங்கம் என்று சொல்லுவதால் 5 இல் மத்திமமான 3வது இடத்தை ஸ்ரீரங்கம் பெற்றது. எனவே

அப்பாலரங்கம் ஸ்ரீரங்கத்தைவிட முன்னானது என்னும் கருத்தை ஒப்பலாம்.

3. நம்மாழ்வார், திருமழிசை ஆழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார் ஆகிய நான்கு ஆழ்வார்களால் 33 பாக்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட ஸ்தலம்.

4. நம்மாழ்வார் இப்பெருமானைப் பாடிவிட்டுத்தான் மோட்சத்திற்குச் சென்றார். நம்மாழ்வாரால் கடைசியாக மங்களாசாசனம் செய்யப்பட்ட ஸ்தலம் இது தான். அதனால்தான் தலைப்பில் கொடுத்த பாடலில் அடங்கப் பிடித்தேன் அதாவது பெருமானுக்குள் “அடங்கப் பிடித்தேன்” என்றார் போலும்.

5. இங்கு பெருமானுக்கு தினந்தோறும் இரவில் அப்பம் அமுது செய்துப் படைக்கப்படுகிறது. அப்பம் அமுது செய்து தினந்தோறும் படைக்கப்படும் திவ்ய தேசம் இது ஒன்றுதான்.

6. ஸ்ரீரெங்க ராஜ சரிதபாணம் என்னும் நூல் இத்தலம் பற்றிய குறிப்புக்களை கொடுக்கிறது.

7. இத்தலமும், சூழ்ந்துள்ள இயற்கைக் காட்சிகளும் திருமங்கையாழ்வாரின் பாடல்களில் படம் பிடிக்கப்பட்டுள்ளன.

8. காவிரிக் கரையில் ஒரு மேட்டின் மேல் அமைந்துள்ள இக்கோவில் தொலை தூரத்தில் இருந்து பார்ப்பதற்கும், கொள்ளிட நதியில் ஒரு கோணத்தில் இருந்து பார்ப்பதற்கும் பேரழகு வாய்ந்தது.

9. ஆழ்வார்கள் ஒரு ஸ்தலத்தில் அனுபவிக்கும் பெருமாளை மற்றோர் ஸ்தலத்தை மங்களாசாசனம் செய்யும்போது மறக்க வொன்னா ஆற்றாமையால் மீண்டும் மங்களாசாசனம் செய்வது மரபும் வழக்கமுமாயிற்று.

பேர் நகரில் வணங்கிப் போன பின்பும் அப்பக்குடத்தான் திருமங்கை மன்னனை விடாது பின் தொடர்கிறார். தம்மை விட்டு நீங்காத அந்த அர்ச்சாவதார சோதியை திருவெள்ளறை சென்று கண்டேன் என்று மீண்டும் மங்களாசாசனம் செய்கிறார். இதோ அப்பாடல்.,

**துளக்கமில் சுடரை, அவுணனுடல்**
**பிளக்கும் மைந்தனைப் பேரில் வணங்கிப் போய்**
**அளப்பி லாரமு தையம ரர்க்கருள்**
**விளக்கினை, சென்று வெள்ளறைக் காண்டுமே.**


West
Thinniyam
nakkal
Sengaraiyur
Anbil
Ariyur
Sathamangalam
Poondi
Kollidam River
Kollidam - Kallanai Main Rd
Kollidam - Kallanai Main Rd
Kaveri River
Kaveri River
Agarapettai
Koviladi
22
Kaveri River
Elangadu
hogur
Katchamangalam
Vennar River
Kiliyur
Indalur
Village Road
Indalur to Solakampatti Village
Maraneri
Village
Pathalapettai
Google
Map data ©2015 Google